







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 2 இதழ் 26 9.07.2026



ஸ்ரீமதே  ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# முத்துக்கள்
# ஸ்வாமி தேஸிகனின் ப்ரதான சதகம்

**பின் இதழின் தொடர்ச்சி**

85. அதில் ஆசார்யத்ரோஹம் ப்ரதானம்

86. இப்படி பொறுக்க முடியாத குற்றங்களில், கையிரண்டையும் கூப்புதலைத் தவிர வேறு சக்தியில்லை. அஞ்ஜலி செய்வது ப்ரதானம் என்று பொருள்

87. பாகவதர்கள் திறத்தில் செய்யும் குற்றம், அவர்களிடத்திலேயே சென்று மன்னிப்புக் கோருவது ப்ரதானம்

88. நமக்கு நல்லது சொல்லி திருத்துபவர்கள் இல்லாதபோது, அதோகதி ஆகிவிடாமல் இருக்க ஆசார்யன் செய்யும் கருணை ப்ரதானம்.

89. தம்மை திருத்திபணிக்கொண்ட ஹனுமான் சாக்ஷியாக உள்ள ஸ்ரீராம பிரானே (இவனே ஸர்வபரமாசார்யன்) ப்ரதானம். ஏனென்றால் இவனே சரணாகதர்களை காப்பதை விரதமாக வைத்துக் கொண்டுள்ளான்

90. குருவர்க்கத்தில் குருக்கள் பலரிருந்தால் அவர்களின் ஆசார்யன் ப்ரதானன்

91. மெஞ்ஞான விஷயங்களை பலர் உபதேசித்திருந்தாலும் எட்டெழுத்து மந்திரம் உபதேசித்தவன் ஆசார்யருள் ப்ரதானன்

92. ஆசார்யன் அவனுடைய ஆசார்யன் இருவரும் சேர்ந்திருக்கும் ஸமயத்தில் ஆசார்யனுடைய ஆசார்யனே ப்ரதானன் (ப்ராசார்யன்)

93. இப்படி இருவரோடு பகவத் ஸந்நிதியும் சேர்ந்தால் ஸர்வ ஆசார்யனான பகவானையே முதலில் ஸேவிக்க வேண்டும்

94. பகவானுடைய ஸந்நிதியில் ஏற்படக்கூடிய மூன்று குற்றங்கள். பகவத் ஸந்நிதியில் பரமைகாந்திகள் எழுந்தருளியிருந்தால் அவர்களையே உபசரித்து வணங்கவேண்டும். அங்கு பெரிய பெரிய பதவியில் உள்ளவர்கள் வந்தால் இவர்களை உதாசீனம் செய்து அவர்களை உபசரிக்கக்கூடாது. இது பெருங்குற்றம்.

95. இப்படி ஏகாந்திகளில் (பகவானையே நினைத்திருப்பவர்கள்) மோக்ஷம் வேண்டும் என்று இருப்பவன் ப்ரதானன்

96. இவன் செய்யும் கைங்கர்யமே ப்ரதானமாகும் (அனன்ய ப்ரயோஜனம்) அதாவது வேறு எதிலும் ஆசையில்லாததினால்

97. பகவத் பாகவத பக்தி நிரம்பப் பெற்றவராயும், பக்தி க்ஞான தத்துவங்களை அறிந்து அதற்கு எதிரான விரோத தத்துவங்களை விலக்குபவவராயும் உள்ளவர்கள் செய்யும். காம்யார்த்த கர்மங்கள். பகவானையே உள்ளடக்கி இருப்பதால் அவனுக்கு அது சாஸ்திரீயமானது என்று எண்ணுதல் ப்ரதானம்

98. இப்படி தத்துவக்ஞானம் மிகுந்தவர்களை வெட்கத்தை விட்டு அடிபணிவது ப்ரதானம்

99. இப்படி தத்துவக்ஞானங்களைப் பெற்றதால் வரும் ஸத்வகுண மேலீட்டால், பகவத் அனுபவ ரஸங்களைத் தடுக்கும் மனவியாதிகளை நீக்கும் பரிஹாரமாகும் (அதாவது தத்வ க்ஞானங்களை உள்ளபடிபெற்றார் மனக்கலக்கம் நீங்கும்) என்றுணர்வது ப்ரதானம்

100. மூன்று குணக் கலவையால் வரும் சுக துக்கங்களில், ஸத்துவகுணம் மூலம் பெறும் சுகம் ப்ரதானம்

101. இப்படி இந்த சரணாகதன் தான் வெறும் நேரான. மறைமுகமான, அனுபவங்களில் தன்னுடையது என்று எண்ணமில்லாமல், இடையறாத பகவத் அனுபவத்திற்கு இடமாய், நாராயண பதத்தோடு சேர்க்கப்பட்ட நாலாம் வேற்றுமை "ஆய" என்ற உருவில் தெரிந்தபடி (எதுவும் எனதல்ல. எல்லாம் அவனுக்காக) என்ற நித்யம், குறையற்ற கைங்கர்யங்களை செய்துவருவதும், அளவில்லா ஆனந்தத்திற்கான சுகங்களில் பரமசுகமாகும். உணர்வுடன்

102. இந்த ஸுகமான, முக்தனுக்கு கிடைக்கும் சுகங்களை போன்றதால் "தம்மையே நாளும் வழங்கித் தொழுவார்க்கு தம்மையே ஒக்க அருள்செய்வார்" (பெரிய திருமொழி) என்ற பாசுரத்தால் தெரியலாம் இதனால் மோக்ஷமளிக்கும் சர்வ சக்தனான பகவானுக்கு மகிழ்ச்சி என்று உணர்வது ப்ரதானம்.

